**தலைப்பு 106 - அனர்த்த முகாமைத்துவ அமைச்சு மற்றும் அந்த அமைச்சின் கீழுள்ள திணைக்களம் மீதான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை – 2013 ஆம் ஆண்டு**

---

இந்த அறிக்கை இரண்டு பகுதிகளை உள்ளடக்கியுள்ளது.

| | | |
|---|---|---|
| 1 ஆம் பகுதி | - | அமைச்சு மற்றும் அமைச்சின் கீழுள்ள திணைக்களத்தின் கணக்குகள் தொடர்பான சுருக்கமான அறிக்கை |
| 2 ஆம் பகுதி | - | ஒவ்வொரு தலைப்புக்குமான விபரமான அறிக்கை |

## 1 ஆம் பகுதி

**அனர்த்த முகாமைத்துவ அமைச்சு மற்றும் அமைச்சின் கீழுள்ள திணைக்களத்தின் கணக்குகள் மீதான சுருக்கமான அறிக்கை**

---

**1. அமைச்சின் கீழுள்ள திணைக்களம்**

| **தலைப்பு** | **திணைக்களம்** |
|---|---|
| 304 | வளிமண்டலவியல் திணைக்களம் |

**2. கணக்குகள்**

**2.1 ஒதுக்கீட்டுக் கணக்கு**

**மொத்த ஏற்பாடும் செலவும்**

அமைச்சு மற்றும் அமைச்சின் கீழுள்ள திணைக்களத்திற்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த மொத்த தேறிய நிதி ஏற்பாடு ரூபா 2,031,618,282 ஆக இருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் இதில் ரூபா 1,768,632,488 தொகை பயன்படுத்தப்பட்டிருந்தது. அதற்கிணங்க அமைச்சு மற்றும் திணைக்களத்தின் தேறிய ஏற்பாடுகளிலிருந்தான சேமிப்புக்கள் முறையே ரூபா 260,193,410 மற்றும் ரூபா 2,792,384 அளவொன்றும் அல்லது தேறிய நிதி ஏற்பாட்டில் 14.6 சதவீதம் மற்றும் 1.1 சதவீதமாக காணப்பட்டன. விபரம் கீழே தரப்பட்டுள்ளது.

| தலைப்பு | 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | | | தேறிய நிதி ஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்புக்கள் |
|---|---|---|---|---|
| | தேறிய நிதியேற்பாடு | பயன்பாடு | சேமிப்பு | |
| | ரூபா | ரூபா | ரூபா | |
| 106 | 1,781,683,282 | 1,521,489,872 | 260,193,410 | 14.6 |
| 304 | 249,935,000 | 247,142,616 | 2,792,384 | 1.1 |
| மொத்தம் | 2,031,618,282 | 1,768,632,488 | 262,985,794 | 12.9 |

## 2.2 முற்பணக் கணக்குகள்

### 2.2.1 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள்

**பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள்**

அமைச்சு மற்றும் அமைச்சின் கீழுள்ள திணைக்களத்திற்காக அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள் தொடர்பாக பாராளுமன்றத்தினால் விதிக்கப்பட்ட எல்லைகளும் உள்ளபடியான பெறுமதிகளும் கீழே காணப்படுகின்றன.

| விடய இலக்கம் | செலவினம் | | பெறுவனவு | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|---|
| | அதிகூடிய எல்லை | உள்ளபடி யானவை | ஆகக்குறைந்த எல்லை | உள்ளபடியா னவை | அதிகூடிய எல்லை | உள்ளபடி யானவை |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| 10601 | 4,000,000 | 2,850,000 | 2,500,000 | 2,796,807 | 16,000,000 | 9,270,146 |
| 30401 | 13,000,000 | 9,352,585 | 5,500,000 | 9,068,808 | 70,000,000 | 31,725 ,213 |

## 2.3 பொது வைப்புக் கணக்கு

2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு அமைச்சு மற்றும் அமைச்சின் கீழுள்ள திணைக்களத்தின் பொது வைப்புக் கணக்குகளிலுள்ள மீதிகள் ரூபா 9,535,041 கூட்டுமொத்தமாக இருந்தது. விபரம் கீழே காட்டப்பட்டுள்ளது.

| அமைச்சு/ திணைக்களம் | வைப்புக் கணக்கு இலக்கம் | 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி |
|---|---|---|
| | | ரூபா |
| அனர்த்த முகாமைத்துவ அமைச்சு | 6000/0000/00/0015/0020/000 | 157,563 |
| வளிமண்டலவியல் திணைக்களம் | 6000/0000/00/0015/0159/000 | 9,377,478 |
| மொத்தம் | | 9,535,041 |

## 2 ஆம் பகுதி

## ஒவ்வொரு தலைப்பு தொடர்பான விபரமான அறிக்கை

### 1. தலைப்பு 106 – அனர்த்த முகாமைத்துவ அமைச்சு

### 1.1 கணக்காய்வின் நோக்கெல்லை

அனர்த்த முகாமைத்துவ அமைச்சின் 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், இணக்கக் கூற்றுக்கள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2014 ஒக்தோபர் 13 ஆந் திகதி அமைச்சின் செயலாளருக்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள், காண்புகள் என்பன கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல் மாதிரிகள் மீதான தெரிவுச் செவ்வை பார்த்தல் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அம் மீளாய்வினதும் செவ்வைபார்த்தலினதும் நோக்கெல்லை, பரப்பு என்பன எனக்கு கிடைக்கப்பெற்றுள்ள பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வினை மேற்கொள்ளக் கூடிய வகையில் தயாரிக்கப்பட்டதாகும்.

**1.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூறறுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு**

ஒதுக்கீட்டுக் கணக்கு, இணக்கக்கூற்று என்பவற்றை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், பொது நிதி மற்றும் நிர்வாக ஒழுங்குவிதிகள் என்பவற்றிற்கு இணங்க பேணுதல், தயாரித்தல், நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதம கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட கணக்குகளையும் இணக்கக் கூற்றுக்களையும் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், அமுலாக்குதல், செயற்படுத்துதல் என்பன இந்த பொறுப்பில் உள்ளடங்குகின்றன.

**1.3 கணக்காய்வு அவதானிப்புக்கள்**

2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி அறிக்கைகள் மற்றும் ஏடுகளின் பிரகாரம் அனர்த்த முகாமைத்துவ அமைச்சின் ஒதுக்கீட்டுக் கணக்கும் இணக்கக் கூற்றும் இவ்வறிக்கையின் (அ) தொடக்கம் (ஆ) வரையான பொது அவதானிப்புக்கள் மற்றும் 1.4 இலிருந்து 1.8 வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்ட பிரதான கணக்காய்வு அவதானிப்புக்களைத் தவிர்த்து திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது அவதானிக்கப்பட்டது.

**(அ) பதிவேடுகள் மற்றும் ஆவணங்களைப் பேணாமை**

அமைச்சினால் இழப்புக்கள் மற்றும் சேதங்கள் பதிவேடு பேணப்பட்டிருந்த போதிலும் முறையாகவும் நாளதுவரையாக்கப்பட்டும் பேணப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) பாதீட்டு முரண்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) செலவின விடயமொன்றிற்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ரூபா 13,000,000 தொகையான தேறிய ஏற்பாடு முழுவதும் சேமிக்கப்பட்டிருந்தது.

(ii) 02 செலவின விடயங்களுக்காக மிகை ஏற்பாடு செய்யப்பட்டதன் காரணமாக நிதி ஏற்பாட்டினைப் பயன்படுத்தியதன் பின்னர் சேமிப்பானது அந்த செலவின விடயங்களுக்குரிய தேறிய நிதி ஏற்பாட்டில் 50 சதவீத்திற்கும் 96 சதவீதத்திற்கும் இடைப்பட்ட வீச்சினைக் கொண்டிருந்தது.

(iii) 12 செலவின விடயங்களின் கீழ் குறைநிரப்பு ஏற்பாடாக ரூபா 1,301,381,753 தொகை வழங்கப்பட்டிருந்ததுடன், அந்த குறைநிரப்பு மதிபீட்டு ஏற்பாட்டில் ஆண்டின் இறுதியில் 198,896,844 தொகை சேமிக்கப்பட்டிருந்ததுடன், அது மொத்த நிதி ஏற்பாட்டின் 15.29 சதவீதத்தைக் கொண்டிருந்தது.

## 1.4 கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 1.4.1 வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம்

2010 மார்ச் 10 ஆந் திகதிய பீஎப்/ஆர்/2/2/3/5(4) ஆம் இலக்க அரசாங்க நிதிப் பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்தின் 1.4.1 ஆம் பந்தியின் பிரகாரம் அமைச்சினால் வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருந்த போதிலும் அவ்வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டத்தில் பாதீட்டு மதிப்பீட்டில் குறிப்பிடப்பட்டிருந்த செலவினங்கள் அதே மாதிரி உள்ளடக்கப்பட்டிருந்ததைத் தவிர மீளாய்வாண்டில் அமைச்சினால் மேற்கொள்ளப்பட வேண்டிய செயற்பாடுகள் எதுவும் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.4.2 உள்ளகக் கணக்காய்வு

உள்ளகக் கணக்காய்வுப் பிரிவொன்று தாபிக்கப்பட்டிருந்த போதிலும் நிரந்தர உள்ளகக் கணக்காய்வாளர் ஒருவர் நியமிக்கப்பட்டிருக்கவில்லை. அப்பதவியில் பதில் கடமை புரிவதற்காக உத்தியோகத்தர் ஒருவர் நியமிக்கப்பட்டிருந்ததுடன், போதியளவு கணக்காய்வொன்று மீளாய்வாண்டில் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## 1.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

### (அ) வருடாந்த பொருள் மெய்மையாய்வு

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 2010 திசெம்பர் 17 ஆம் திகதிய பீஎப்/மெய்மையாய்வுச் சபை/01 ஆம் இலக்க அரச நிதிப் பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்தின் மூலம் திருத்தப்பட்ட 2009 திசெம்பர் 09 ஆம் திகதிய 441 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் 2013 இன் வருடாந்த பொருள் மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டு 2014 மார்ச் 31 ஆம் திகதிக்கு

முன்னர் அந்த அறிக்கை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், அமைச்சினால் அவ்வறிக்கை 04 மாதங்கள் தாமதத்தின் பின்னர் அதாவது 2014 யூலை 31 ஆம் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், அனர்த்த உதவி சேவைகள் நிலையத்தினால் அவ்வறிக்கை 07 மாதங்கள் தாமதித்து 2014 திசெம்பர் 02 ஆம் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

(ii) 2013 ஆம் ஆண்டிற்குரிய மெய்மையாய்வு அறிக்கைகளில் சுட்டிக் காண்பிக்கப்பட்டிருந்த 03 பற்றாக்குறை தொடர்பாகவும் ஏனைய பரிந்துரைகள் தொடர்பாகவும் நிதிப் பிரமாணம் 760 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 1.6 இணக்கமின்மைகள்

### சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுடனான இணக்கமின்மை

கணக்காய்வுத் தெரிவுச் செவ்வையின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றின் ஏற்பாடுகளுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் பகுப்பாய்வு செய்து கீழே தரப்படுகின்றன.

| **சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றிற்கான தொடர்பு** | **இணக்கமின்மை** |
|---|---|
| இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணங்கள் | |
| (அ) நிதிப் பிரமாணம் 1645 | அமைச்சிற்குச் சொந்தமான வாகனங்களுக்காக சம்பவக் குறிப்புப் பதிவேடு நாளதுவரையாக்கப் பட்டிருக்கவில்லை. |
| (ஆ) நிதிப் பிரமாணம் 1647 (அ) | அமைச்சிற்குச் சொந்தமான 27 வாகனங்களுக்காக கொள்வனவு மற்றும் விநியோகம் தொடர்பான நுகர்வுப் பொருள் பதிவேடு பராமரிக்கப்பட வேண்டிய போதிலும், அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

(இ) நிதிப்பிரமாணம் 1647 (உ) அமைச்சிற்குச் சொந்தமான 27 வாகனங்களுக்காக வாகனங்கள் பதிவேடொன்று பராமரிக்கப்பட வேண்டிய போதிலும், அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 1.7 செயலாற்றல்

2013 இன் வருடாந்த பாதீட்டு மதிப்பிட்டின் பிரகாரம் அமைச்சின் செயன்முன்னேற்றம் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

(அ) தேசிய அனர்த்த நிவாரணச் சேவைகள் நிலையத்தினால் அவசர அனர்த்த நிலைமையொன்றில் மக்களுக்கு நிவாரணமளித்தல் மற்றும் சேதங்களுக்குள்ளான பிரதேசங்களை நல்ல நிலைமைக்கு கொண்டு வருவதன் கீழ் 2012 ஆம் ஆண்டின் போது 22 மாவட்டங்களில் ஏற்பட்ட வீடுகளின் சேதங்களுக்காக மீளாய்வாண்டின் போது 425,000,000 தொகை குறைநிரப்பு மதிப்பீட்டின் மூலம் நிதியைப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் 22 மாவட்டங்களில் முழுமையாக சேதங்கள் மற்றும் அரைசேதங்களுக்கு உட்பட்ட வீடுகளின் எண்ணிக்கை முறையே 2,138 மற்றும் 9,950 இற்காக நிவாரணம் வழங்குவதற்காக விபரங்கள் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், அதற்காக ரூபா 344,181,440 நிதி ஏற்பாடு வழங்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் 2014 ஒக்தோபர் 31 ஆம் திகதி வரையிலும் உள்ளவாறாக நிதிஏற்பாடுள் வழங்கப்பட்ட வீடுகளின் எண்ணிக்கை தொடர்பான விபரங்கள் மாவட்ட செயலகத்தினால் தேசிய அனர்த்த நிவாரணச் சேவைகள் நிலையத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) அனர்த்திற்குட்பட்ட மக்களுக்கு உலர் உணவு, சமைத்த உணவுகள் மற்றும் மரணித்தவர்களுக்கு உதவிகளாக ரூபா 157,759,564 தொகை மதிப்பீடு செய்யப்பட்டிருந்ததுடன், அதற்காக ரூபா 140,314,487 ஆன நிதிஏற்பாடு 25 மாவட்டங்களுக்கு விடுவிக்கப்பட்டிருந்தது. இந்த உணவுப் பொருட்களை பகிர்ந்தளித்தல் மற்றும் மரண உதவிகள் கொடுப்பனவு தொடர்பான விபரங்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**1.8 மனிதவள முகாமைத்துவம்**

**(அ) அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும்**

2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறு இருந்தது.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட ஊழியர் எண்ணிக்கை | உள்ளபடியான ஊழியர் எண்ணிக்கை | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 23 | 15 | 08 |
| (ii) | மூன்றாம் நிலை | 04 | 03 | 01 |
| (iii) | இரண்டாம் நிலை | 443 | 393 | 50 |
| (iv) | ஆரம்ப நிலை | 47 | 38 | 09 |
| | மொத்தம் | 517 | 449 | 68 |

தேசிய அனர்த்த நிவாரணச் சேவைகள் நிலையத்தின் பிரதிப் பணிப்பாளர் மற்றும் உதவிப் பணிப்பாளர் ஆகிய 02 பதவிகள் 3 ஆண்டு காலமாக வெற்றிடங்களாக காணப்பட்டன.

மீளாய்வாண்டின் இறுதியளவில் 68 வெற்றிடங்களை நிரப்பவதற்கு நிறுவனத்தால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) முறையற்ற விதத்தில் வேறு தரப்பினருக்கு விடுவிக்கப்பட்ட மனித வளங்கள்**

அமைச்சினால் மீளாய்வாண்டின் ஒக்தோபர் மாதத்திலிருந்து அனர்த்த முகாமைத்துவ நிலையத்திற்கு அபிவிருத்தி உத்தியோகத்தர் ஒருவரை விடுவித்திருந்ததுடன், 2014 செப்தெம்பர் மாதம் வரை அமைச்சினால் செலுத்தப்பட்ட ரூபா 309,778 தொகையான சம்பளத்தை நிலையத்திடமிருந்து மீள்நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 2. தலைப்பு 304 – வளிமண்டலவியல் திணைக்களம்

------------------------------------------------------------------------------------

### 2.1 கணக்காய்வின் நோக்கெல்லை

-----------------------------------------------------

வளிமண்டலவியல் திணைக்களத்தின் 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், இணக்கக் கூற்றுக்கள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2013 ஒக்தோபர் 31 ஆந் திகதி திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்திற்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள், காண்புகள் என்பன கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல் மாதிரிகள் மீதான தெரிவுச் செவ்வை பார்த்தல் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அம் மீளாய்வினதும் செவ்வைபார்த்தலினதும் நோக்கெல்லை, பரப்பு என்பன எனக்கு கிடைக்கப்பெற்றுள்ள பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வினை மேற்கொள்ளக் கூடிய வகையில் தயாரிக்கப்பட்டதாகும்.

### 2.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு

------------------------------------------------------------------------------------------------------------------------------------

ஒதுக்கீட்டுக் கணக்கு, இணக்கக்கூற்று என்பவற்றை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், பொது நிதி மற்றும் நிர்வாக ஒழுங்குவிதிகள் என்பவற்றிற்கு இணங்க பேணுதல், தயாரித்தல், நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதம கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட கணக்குகளையும் இணக்கக் கூற்றுக்களையும் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், அமுலாக்குதல், செயற்படுத்துதல் என்பன இந்த பொறுப்பில் உள்ளடங்குகின்றன.

**2.3 கணக்காய்வு அவதானிப்புக்கள்**

2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி அறிக்கைகள் மற்றும் ஏடுகளின் பிரகாரம் வளிமண்டலவியல் திணைக்களத்தின் ஒதுக்கீட்டுக் கணக்கும் இணக்கக் கூற்றும் இவ்வறிக்கையின் (அ) தொடக்கம் (இ) வரையான பொது அவதானிப்புக்கள் மற்றும் 2.4 இலிருந்து 2.8 வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்ட பிரதான கணக்காய்வு அவதானிப்புக்களைத் தவிர்த்து திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது அவதானிக்கப்பட்டது.

**(அ) பாதீட்டு முரண்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 01 செலவின விடயமொன்றிற்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ரூபா 42,000 தொகையான தேறிய ஏற்பாடு முழுவதும் சேமிக்கப்பட்டிருந்தது.

(ii) 11 செலவின விடயங்களுக்காக மீளாய்வாண்டின் இறுதியிலான சேமிப்புக்கள் ரூபா 117,859 ஆக இருந்ததுடன், அத்திகதியில் அவ்விடயங்களில் பொறுப்புக்ளின் கூட்டுத்தொகை ரூபா 5,566,302 ஆக இருந்தது. அதன் பிரகாரம் ஆண்டின் இறுதியில் சேமிக்கப்பட்ட நிதிஏற்பாட்டை மிகைத்து ரூபா 5,448,443 தொகையான பொறுப்புக்களுக்கு கடப்பாடாக இருந்தது.

(iii) 06 செலவின விடயங்களுக்குரிய ரூபா 27,183 கூட்டுப்பெறுமதியான பொறுப்புக்கள் ஒதுக்கீட்டுக் கணக்கில் பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை.

(iv) 01 செலவின விடயமொன்றில் ரூபா 16,100 தொகையான பொறுப்புக்கள் கூடுதலாகக் காண்பிக்கப்பட்டிருந்தது.

**(ஆ) பொது வைப்புக் கணக்கு**

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகின்றன.

2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு திணைக்களத்தின் பொது வைப்புக் கணக்குகளிலுள்ள மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 9,377,478 ஆக இருந்ததுடன், 02 ஆண்டுகளுக்கு மேற்பட்ட ரூபா 3,155,562 தொகையான 04 வைப்புக்கள் தொடர்பாக நிதிப் பிரமாணம் 571 இன் படி நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**(இ) அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு**

2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சேவையை விட்டுச்சென்ற 03 உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய 10 ஆண்டுகளுக்கு மேற்பட்ட கடன் மீதி ரூா 172,479 ஆக இருந்தது.

## 2.4 நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்

### 2.4.1 சொத்துக்கள் முகாமைத்துவம்

**விளைவற்ற மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்**

கீழே காட்டப்பட்டுள்ளதன் பிரகாரம் சொத்துக்கள் விளைவற்று அல்லது குறைப் பயன்பாட்டிற்குட்பட்டிருந்தமை தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் பிரகாரம் அவதானிக்கப்பட்டது.

| சொத்து வகை | அலகுகளின் எண்ணிக்கை | விளைவற்று அல்லது குறைப் பயன்பாட்டிற்குட்பட்டிருந்த காலப்பகுதி |
|---|---|---|
| இயந்திர பொறிகள் | 05 | |
| - WF 03 ரேடார் இயந்திரம் | | 22 வருடங்கள் |
| - WF 33 Plessey ரேடார் இயந்திரம் | | 02 வருடங்கள் |
| - RSGE 10 இந்திய ரேடியோ சோன்ட் இயந்திரம் (RADIO SONDE) | | 03 வருடங்கள் |
| - RSGE 4250 இந்திய ரேடியோ சோன்ட் இயந்திரம் (RADIO SONDE) | | 28 வருடங்கள் |
| - சூறாவளி விபத்து எதிர்வுகூடல் ரேடார் இயந்திரம் | | 07 வருடங்கள் |

## 2.5 இணக்கமின்மைகள்

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுடனான இணக்கமின்மை**

கணக்காய்வுத் தெரிவுச் செவ்வையின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் என்பவற்றின் ஏற்பாடுகளுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் பகுப்பாய்வு செய்து கீழே தரப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றிற்கான தொடர்பு | பெறுமதி | இணக்கமின்மை |
|---|---|---|
| | ரூபா | |
| தாபன விதிக்கோவை | | |
| (அ) தாபன விதிக்கோவையின் XXIV ஆம் அத்தியாயத்தின் 4.2.1 4.2.4 4.2.5, மற்றும் 4.5 ஆம் பிரிவுகள் | 172,479 | சேவையை விட்டுச்சென்ற 03 உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய கடன் மீதிகளை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை |
| (ஆ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம் | | |
| நிதிப் பிரமாணம் 104 | 27,826 | மீளாய்வாண்டிற்குரிய ரூபா 27,826 ஆன 02 வாகன விபத்துகள் தொடர்பாக நிதிப் பிரமாணத்தின் நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

## 2.7 செயலாற்றல்

**போதியளவில் நிறைவேற்றப்படாத பிரதான கருமங்கள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

**(அ) டொப்ளர் ரேடார் முறைமையை தாபித்தல்**

நாட்டில் ஏற்பட்ட மழை நிலைமை மற்றும் அதனோடு இணைந்த காலநிலை முறைமையை நன்றாக அவதானிப்பதற்காக புதிய டொப்ளர் ரேடார்

முறைமையொன்று தெனியாய பிரதேசத்தில் அமைந்துள்ள கொங்கல மலைத்தொடரில் தாபிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. மழை ஏற்படக்கூடிய காலநிலை முறைமை, புயல் மற்றும் அதனுடன் அண்மித்த புயற் காற்று தொடர்பாக டொப்ளர் ரேடார் உபகரணத்தினால் மேற்கொள்ளப்படும் அவதானிப்புக்கள், கொழும்பு தலைமை அலுவகத்தின் செயற்பாட்டுப் பிரிவான தேசிய வளிமண்டல நிலையத்திலிருந்து அச்சந்தர்ப்பத்திலேயே பார்க்கக்கூடிய இயலுமை உள்ளதாகவும், உடனடியாக சீரற்ற காலநிலை தொடர்பாக முன் எதிர்வுகூறல் வழங்கக்கூடிய முறையொன்றுக்கு சிறந்ததாகும் என குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த டொப்ளர் ரேடார் முறைமையை கொள்வனவு செய்வதற்காகவும் 23 மீற்றர் உயரமான கொங்கிரீட் கோபுரமொன்றை நிர்மாணிப்பதற்காகவும் 2006 ஆம் ஆண்டிலிருந்து 2013 திசெம்பர் 31 ஆம் திகதி வரை ரூபா 1,250,579,395 தொகையான நிதிஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன், ரூபா 402,825,422 தொகை செலவிடப்பட்டிருந்தது.

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) இந்த டொப்ளர் ரேடார் முறைமையை கொள்வனவு செய்வதற்காக 2007 மே 24 ஆம் திகதி உலக வளிமண்டலவியல் விஞ்ஞான சங்கத்துடன் உடன்படிக்கையொன்று மேற்கொள்ளப்பட்டிருந்தது. 2008 ஆம் ஆண்டின் செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் 2007 ஆம் ஆண்டின் போது கொள்வனவு நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டு 2010 ஆம் ஆண்டின் இறுதி வரையிலும் இயந்திரத்தை தாபித்து செயற்பாடுகளை ஆரம்பிப்பதற்கு எதிர்பார்க்கப்பட்டிருந்தது. அவ்வாறே 2008 ஆம் ஆண்டின் போது நடாத்தப்பட்ட இரண்டாவது கூட்டிணைப்பு கூட்டத்தின் போதும் 2010 ஆம் ஆண்டில் டொப்ளர் ரேடார் முறைமையை பொருத்தி நிறைவு செய்ய முடியுமென தெரிவிக்கப்பட்டிருந்தது.

டொப்ளர் ரேடார் முறைமையை பொருத்துவதற்கு கோபுரத்தை நிர்மாணிப்பதற்கான ஒப்பந்தம் மத்திய பொறியியல் உசாத்துணைப் பணியகத்திற்கு (CECB) 2010 மார்ச் 12 ஆம் திகதி ரூபா 60,452,000 (பெறுமதி சேர் வரியுடன்) பெறுமதிக்கு 120 நாட்களுக்குள் வேலை நிறைவு செய்யும் இணக்கப்பாட்டின் பிரகாரம் வழங்கப்பட்டிருந்தது. உடன்படிக்கையுடன் இணைக்கப்பட்டிருந்த நிர்மாண நிகழ்ச்சித்திட்டத்தின் பிரகாரம் 2010 மார்ச் 15 ஆம் திகதி வேலை ஆரம்பிக்கப்பட்டு 2010 ஆகஸ்ட் 27 ஆம் திகதி வேலை முடிவுறுத்தப்பட வேண்டியிருந்தது. எவ்வாறாயினும் வேலையைப் பூர்த்தி செய்யும் திகதி அவ்வப்போது

வேறுபட்டு 2013 திசெம்பர் 31 ஆம் திகதியளவில் கோபுரத்தின் வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டிருந்தது, எவ்வாறாயினும் கோபுரங்கள் முறையாக ஒப்படைத்தல் நடவடிக்கைகள் 2014 செப்தெம்பர் 30 ஆம் திகதி வரையிலும் நடைபெற்றிருக்கவில்லை.

(ii) டொப்ளர் ரேடார் முறைமையை கொள்வனவு செய்து பொருத்துவதற்காக உலக வளிமண்டலவியல் சங்கத்துடன் மேற்கொள்ளப்பட்டிருந்த உடன்படிக்கை 05 ஆண்டுகளில் அதாவது 2012 மே 23 ஆம் திகதி முடிவடைந்திருந்தது. எவ்வாறாயினும் ரேடார் உபகரணங்களைப் பொருத்தி செயற்படுத்தும் நடவடிக்கை இதுவரையிலும் முடிவடைந்திராத போதும், உடன்படிக்கை காலத்தை நீடிப்பதற்கு 2014 செப்தெம்பர் 30 ஆம் திகதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(iii) இச்செயற்திட்டத்தை செயற்படுத்துவதற்காக செயற்பாட்டுக் குழுவொன்று (Steering Committee) நியமிக்கப்பட்டிருந்ததுடன், 2010 ஆம் ஆண்டிற்குப் பின்னர் செயற்திட்டம் தொடர்பான பின்தொடர் நடவடிக்கைகளுக்காக எந்தவொரு கூட்டமும் நடாத்தப்பட்டிருக்கவில்லை.

(iv) திணைக்களத்தினால் ரேடார் கோபுரம் நிர்மாணிக்கும் ஒப்பந்தத்தின் காலம் மற்றும் விடயப் பரப்பில் ஏற்பட்ட மாற்றங்களுக்காக மேலதிக உடன்படிக்கையொன்றை தயாரிப்பதற்கு திணைக்களம் நடவடிக்கை எடுக்காமல் இருந்ததுடன், தயாரிக்கப்பட்டிருந்த உடன்படிக்கையின் பிரகாரம் தாமத காலத்திற்காக தாமதக் கட்டணத்தை அறவிடுவதற்கு முடியாமல் இருந்தது.

**(ஆ) ரேடார் பிரிவு**

------------------------

காற்றின் வேகம், திசை, வெப்பம், ஈரப்பதன் மற்றும் காற்றின் அமுக்கம் போன்ற ஆகக்கூடிய காலநிலை தரவுகளைப் பெற்றுக்கொள்வதற்காக ஒவ்வொரு நாளும் 03 நிர்ணயிக்கப்பட்ட நேரங்களில் ரேடார் பலூன்களை அனுப்புவது ரேடார் பிரிவின் கடமைப்பாடாக இருந்தது. எவ்வாறாயினும் இப்பிரிவு ஒரு நாளைக்கு ஒரு ரோடார் பலூன் வீதம் வாரமொன்றுக்கு 03 நாட்கள் காலைப்பொழுதில் 03 ரோடார் பலூன்கள் அனுப்புவதுடன், அடுத்த இரண்டு நாட்களில் ஒரு கட்டளை பலூன் வீதம் இரண்டு நாட்களுக்கு 2 கட்டளை பலூன்கள் அனுப்பிவைக்கப்படுகின்றன. இக்கட்டளை பலூன் மூலம் காற்றின்

வேகம் மற்றும் திசை தொடர்பான தரவுகளை மாத்திரமே பெற்றுக்கொள்ள முடியுமாக இருந்தமை அவதானிக்கப்பட்டது.

ரோடார் பலூன்கள் மூலம் பெற்றுக்கொள்ளப்படுகின்ற காலநிலை எதிர்வுகூறலுக்கு மிக முக்கியமானதாக இருந்த போதிலும், கட்டளை பலூன்கள் பயன்படுத்தப்படும் 02 நாட்கள் மற்றும் பலூன் அனுப்பாத 02 நாட்கள் உட்பட வாரத்தில் 04 நாட்கள் ரோடார் பலூன் அனுப்பப்படாமையால் அத்தினங்களில் மேல் வாயுமண்டலத்தின் ஈரப்பதன், வெப்பநிலை, முகில்கூட்டம், மழை மற்றும் காற்றின் அமுக்கம் தொடர்பான தகவல்களைப் பெற்றுக்கொள்ள முடியாதிருந்தது.

ரோடார் பலூன் மூலம் காலநிலைத் தரவுகளைப் பெற்றுக்கொள்வதற்காக மேற்கொள்ளப்பட வேண்டிய அதிக கிரயம் காரணமாக அம்மார்க்கமாக தரவுகளைப் பெற்றுக்கொள்வதை மட்டுப்படுத்தப்பட வேண்டியிருந்ததாக வளிமண்டவியல் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தின் தெளிவுபடுத்தலாக இருந்தது.

**(இ) காலநிலைப் பிரிவு**

--------------------------------

தலைமை அலுவலகத்திலிருந்தும் 23 பிராந்திய அலுவலகங்களிலிருந்தும் 3 மணித்தியாலங்களுக்கு ஒருமுறை பெற்றுக்கொள்ளப்படுகின்ற காலநிலை தரவுகளுடன்கூடிய மொத்த அவதானிப்புப் புத்தகங்களை பொழிப்பாக்குதல் மற்றும் தரவுகளின் சரியானதன்மையைப் பரீட்சித்தல், காலநிலை தொடர்பாக தகவல்களை தேவையான தரப்பினருக்கு வழங்குதல் என்பன இப்பிரிவின் கடமைப்பாடாகும். எவ்வாறாயினும் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியின் பிரகாரம் இப்பரிவிற்காக 07 வளிமண்டலவியல் உத்தியோகத்தர்கள் இருக்க வேண்டிய போதிலும், அப்பிரிவிற்கு இரண்டு உத்தியோகத்தர்கள் மாத்திரம் இணைக்கப்பட்டிருந்தனர்.

அத்துடன் 2013 ஆம் ஆண்டின் முதல் 06 மாதங்களின் தரவுகளின் சரியான தன்மையைப் பரீட்சித்தல் மற்றும் பொழிப்பாக்குதல் என்பன இடம்பெற்றிருக்கவில்லை.

## 2.7 மனிதவள முகாமைத்துவம்

### அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும்

2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறு இருந்தது.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட ஊழியர் எண்ணிக்கை | உள்ளபடியான ஊழியர் எண்ணிக்கை | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 54 | 29 | 25 |
| (ii) | மூன்றாம் நிலை | 29 | 05 | 24 |
| (iii) | இரண்டாம் நிலை | 238 | 181 | 57 |
| (iv) | ஆரம்ப நிலை | 140 | 115 | 25 |
| | மொத்தம் | 461 | 330 | 131 |

மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் 131 வெற்றிடங்களை நிரப்பவதற்கு திணைக்களம் தவறியிருந்தது.